புதினப் பத்திரிகையாகப்
பதிவுசெய்யப்பெற்றது.

இந்துசாதனம்.

விரோதி ௵ (1889)
ஆவணி ௴ உஉ
ஆரம்பமானது.

பத்திரக் கிரயம்.

(முற்பணமாகக் கொடுக்கவேண்டியது.)
யாழ்ப்பாணப்பட்டினம்: ௵ க-க்கு ரூ. உ-உ௫.
வெளியூர், இந்தியா: ,, ரூ. ௩-உ௫.
தோட்டப்பகுதி: ,, ரூ. ௩-எ௫.
தனிப்பிரதி சதம் -0௫.

THE HINDU ORGAN.

குருவாரந்தோறும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

விளம்பர விகிதம்.

		ரூ. ச.
முதன்முறைக்கு:—	ஒருகலம்	எ-௫0.
,,	அரைக்கலம்	ச-00.
,,	கால்கலம்	உ-௫0.
,,	ஒரு அங்குலம்	-௫0.

அடுத்தமுறைகட்கு மேலே விகிதங்களில் அரைவாசி

புத்தகம் - உஅ. யாழ்ப்பாணம்—நள௵ ஆடி௴ ௩௰ ககூகசு-ம்ஆ ஜூலைமீ உ0௨. இலக்கம்—ரு.

DUPLICATE

உ
கணபதி துணை.

சீர்பூத்த கருவிநூ லுணர்ச்சிநேங்கச் சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப் பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தேங்கப் பிறைபூத்த சடைமவுலிப் பிரானுர் தந்த
கார்பூத்த வழிவிச்சை தொழிலென் றேறு மதம்பூத்த விநாயகன்றன் வனசநி வாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம், வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக,
ஆழ்க தீயதெல் லாமர னாமமே, சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

விளம்பரம்.

THE CHEAPEST HOUSE
FOR HIGH CLASS SILK CLOTHS.

நம்பிக்கையும், நாணயமும், சகாயமுமான
பட்டு வர்த்தகசாலை எது?

காசியிற் பிரபல பட்டுவர்த்தகர்களாகிய
கே. எஸ். முத்தையா கம்பெனியார்
என்று தெரிந்துகொள்ளுங்கள்.

இங்கு, அநேக நவீன கலர்களிற் புதுமாதிரியான பட்டுப்புடைவைகள், ரவிக்கைக் குட்டைகள், தாவணிகள், பின்னை (பல்க்காறு) வேட்டிகள், தலைக்குட்டைகள், நார்மடித் தினிசுகள், வெண்பட்டு தோத்தி, அங்க வஸ்திரம், சோமன் ஜோடி முதலிய பலவிதமான பட்டாடைகளுஞ் சகாயமான விலைக்குச் சித்தமாக விருக்கின்றன. விபரமான கேட்லாக் விரும்பினுல் இனமாகப் பெற்றுக்கொள்ளலாம். உடனே எழுதுங்கள்.

K. S. Muthiah & Co.,
"Silk House",
BENARES, CITY.

பனைமரங்கள்.

நூறு பனை மரங்களிலிருந்து ரு00 ரூபா பெறுமதியான வரும்படி பெறலாம்.

இது நூறு மரங்களிலிருந்து வரக்கூடிய வரும்படியின் சராசரி மதிப்பு. இது தென்னைகளிலிருந்துவரக்கூடிய வரும்படியிலும் அதிகம். தக்க முயற்சி செய்தால் யாழ்ப்பாணத்திலே இலங்கையின் மற்றெந்தப் பகுதிகளிலும்பார்க்கப் பனைமரங்களிலிருந்து அதிக லாபம் பெறலாம்.

இடைவிடாது கள்ளுக் கட்டினுல் மரத்துக்குமரம் வித்தியாசமின்றி எந்தமரத்திலும் ஒரேமாதிரியாகக் கள்ளுச் சேர்க்கலாம். முதல் வருஷத்தில் இப்படி இல்லாதிருக்கக்கூடும். ஆனுல் இரண்டாம் வருஷத்தில் எந்த மரத்திலும் கள்ளு நல்லாய்ச் சேர்க்கலாம். இரண்டாம் வருஷப் பலனையடைவதற்கு முதலாம்வருஷத்தில் நல்லவேலை செய்ய வேண்டும்.

இரண்டாம்வருஷத்தில் நூறு நாட்களுக்காகுதல் ஒவ்வொரு மரத்திலுமிருந்து ஒவ்வொரு கலன் கள்ளுச் சேர்க்கலாம். ஆகவே நூறு மரங்களிலிருந்து க0,000 கலன் கள்ளுச் சேர்க்கலாம்.

ஒவ்வொரு கலன் கள்ளிலிருந்தும் ஒன்றேடு ஐந்திலொரு ரூத்தல் பனங்கட்டி செய்யலாம். ஆனுல் ஒருரூத்தல் வீதப்படி கணக்கிட்டாலும் க0,000 ரூத்தல் அல்லது உ00 கண்டி பனங்கட்டி செய்யலாம்.

குறைந்தபட்சமாக கண்டி ஒன்று ரூபா உடுவீமதாகப்பார்த்தாலும் நூறு மரங்களிலிருந்து ரு00 ரூபா வரும்படி பெறலாம்.

இதைப்பற்றி முழுவிபரங்களு மடங்கியுள்ள பிரபந்தங்களை எங்களுக்கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

விலாசம்:—
இலங்கைச் சீனிக் கம்பனியார்,
வல்லுவெட்டித்துறை.

கட்பார்வை.

குளிர்ச்சியான சந்திரகாந்த வில்லைபோட்ட
கண்ணாடிகளைப்பாவித்துப்
பார்வையைக்காப்பாற்றுங்கள்.
திறமான மூக்குக் கண்ணாடிகள்
எங்களிடம்
சகாயவிலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.
எம். நல்லையா அண் சன்ஸ்,
பறங்கித்தெரு,
யாழ்ப்பாணம்.

S. U. N. & Co.
Weaving Silk Manufacturers,
BENARES CITY, U. P.

பெரிய கம்பெனி. நாணயமான சரக்குகள்

S.U.N.&Co
BENARES CITY.
KASHI
VISHWESHWAR.

இந்தக் கம்பெனியில் செய்யாநிற உத்தமமான பனாரிஸ் பட்டுச்சேலைகள், ரவிக்கைகள், துப்பட்டாக்கள், பஸ்தாறு, காஷ்மீர் போர்வைகள், ருத்திராட்சங்கள், குழந்தைகளின் விளையாட்டுச்சாமான்கள் முதலான அபூர்வமான சாமான்களைப் பற்றிய 68 பக்கமுள்ள ஒரு "காட்லாக்"கும் ஒரு காலைபரவர் கயறும் கோருகிறவர்களுக்கு இனமாய் அனுப்பப்படும்.

எஸ்.யூ.என். அண்டு கம்பெனி,
பனாரிஸ் ஸிற்றி.

பம்பாய்ச் சேலைகள்.

மிகவும்நாணயமானது! மிகவும்சரசமானது!!
16 முழ நீளம்.



இந்தச் சேலைகள் கேர்த்தியான வெள்ளை மல்லில் மத்தியில் மாங்காய், அன்னம், கிளி, சூரியப்பிறை, சந்திரப்பிறை, நக்ஷத்திரம், புட்டாக்கள்; இவைகள்போல்ஒவ்வொரு சேலைகளிலும் ஒவ்வொருவிதமுண்டு. கரைகளிலும் முந்தானைகளிலும் விசித்திரமான புஷ்பக் கொடிகள் போட்டிருக்கும். இந்தச் சேலைகள் பம்பாயிலிருந்து ஸ்பெஷலாகக் கொஞ்சந்தான் தருவித்திருக்கிறோம். வேண்டியவர்கள் கூடிய சீக்கிரத்தில் தருவித்துக்கொள்ளவும். செட்டால், சிங்கப்பூர், மோரீஸ் முதலிய தேசங்களுக்கு முற்பணமில்லாமல் வி. பி. யில் அனுப்ப முடியாது. சேலை 1-க்கு கிரயம் ரூபா 2, அணா 4.

கனக அண்டு கம்பெனி,
பார்க்டவுன் போஸ்ட்,
மதராஸ்.

ஆறுமுகநாவலரவர்களால்
அச்சிற்பதிப்பிக்கப்பட்ட
தமிழ்ப்புத்தகங்கள்
வண்ணார்பண்ணைச்
சைவப்பிரகாசவித்தியாசாலையில்
விற்கப்படும்.
V. P. போஸ்றில் அனுப்பவேண்டியோர்
தபாற்செலவுமாத்திரம் முன்கூட்டி அனுப்பல்
வேண்டும்.

விளம்பரம்.

ககூகசும் ஆ நவம்பர்மீ கவ தொடக்கம் ஒரு வருடத்திற்கு: கண்டி, கட்டுகாஸ்தோட்டை, மாத்தளை முதலிய டிஸ்திறிக்குகளில் பகிரங்க வேலைப் பகுதியாரின் பாவிப்புக்கு மிகத் திறமான கல்லுண்டை அரிசி கொடுப்பதற்கு ஒப்பந்தக் கேள்விக் கடதாசிகள் ககூகசும் ஆ ஆகஸ்டுமீ கஉ மத்தியானம்வரைக்கும், ஒப்பந்தக் கேள்வி விசாரணைச் சங்கத் தலைவரால் அரசிறை வருமானத் தலைவர் கந்தோரில் ஏற்றுக்கொள்ளப்படும்.

இன்னும் தேவையான வேறு விபரங்கள் இந்தமீ கசஉ வெளிப்பட்ட கவண்மேந்தார் 'கசற்' பத்திரிகையிற் பார்த்துக்கொள்ளலாம். அல்லது கண்டிப் பிரதான இஞ்சினீரிடம் எழுதி அறிந்துகொள்ளலாம்.

விளம்பரம்.

ககூகசும் ஆ நவம்பர்மீ கவ தொடக்கம் ஒரு வருடத்திற்கு: வவுனியாவிலும், மன்னாரிலுமுள்ள பகிரங்கவேலைப்பகுதியாரின் உபயோகத்திற்காக முதற்றரமான கல்லுண்டை அரிசி அல்லதுமுதற்றரமான ஊரரிசி தருவிக்க விரும்புவோரிடமிருந்து, இன்றுதொடக்கம் ஆகஸ்டுமீ கஉ மத்தியானம் கஉ மணிவரையும் அரசிறை வருமானக் கந்தோரில் ஒப்பந்தக் கேள்விப் பத்திரங்கள் ஒப்பந்த கேள்விச் சங்கத் தலைவரால் பெற்றுக் கொள்ளப்படும்.

இதைப்பற்றி வேறு விபரங்கள் அறியவிரும்புவோர் ஜூலைமீ கசஉ வெளிவந்த கவண்மேந்து 'கசற்' பத்திரிகையிலாவது வடமாகாணப் பிரதான இஞ்சினீரிடமிருந்தாவது அறிந்துகொள்ளலாம்.

விளம்பரம்.

மட்டக்களப்பு, கல்முனை, திரிகோணமலை டிஸ்திறிக்குகளில் பகிரங்கவேலைப் பகுதியாரின் பாவிப்புக்கு மிகத் திறமான கல்லுண்டை அரிசியும், ஊர் அரிசியும்கொடுப்பதற்கு ஒப்பந்தக் கேள்விக் கடதாசிகள் ஒப்பந்தக் கேள்வி விசாரணைச் சங்கத்தலைவரால் அரசிறை வருமானத் தலைவர் கந்தோரில் ககூகசும் ஆ ஆகஸ்டுமீ கஉ மத்தியானம் வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.

இன்னும் தேவையான வேறு விபரங்கள் ககூகசும் ஆ ஜூலைமீ கசஉ வெளிப்பட்ட கவண்மேந்தார் 'கசற்' பத்திரிகையில் பார்த்துக் கொள்ளலாம். அல்லது மட்டக்களப்புப் பிரதான இஞ்சினீருக்கு எழுதி அறிந்துகொள்ளலாம்.

விளம்பரம்.

திரிகோணமலை கூம் செம்பர் புதுரோட்டில் சொன்விலையாக வாங்கியிருக்கும் தரையில் இரண்டு கக்கூசுகள்கட்டுவதற்கான முத்திரை வைக்கப்பட்ட கேள்விப்பத்திரங்கள், ககூகசும் ஆ ஆவணிமீ கூவ வியாழக்கிழமை மத்தியானம் கஉ மணிவரைக்கும் இந்தக் கந்தோரில் ஏற்றுக் கொள்ளப்படும்.

ஒவ்வொரு கக்கூசும் ஆறு இருப்பிடங்கள் உள்ளதும் மேல் கோப்பிசம்போட்டு ஊர் ஓட்டினால் மூடப்பட்டிருக்கவேண்டும்.

இந்தத் தரைக்குள்ளிருக்கும் கிணற்றுக்கு கரு அடி நீளம் அ அடி அகலம் கூ இஞ்சு கனமுள்ள மறைவுக் கற்சுவரும் சுண்ணாம்புக் கன்கிறீற்றால் கிணற்றைச்சுற்றி மேடையும் ௪0 அடி நீளம் கஉ இஞ்சு அகலமுமுள்ள அரைவளைவான நீர் அகற்றும் வாறுவ கட்டிச் சீமேந்தால் பூசவும் வேண்டும்.

வேலைகளைப் பிளானிலும் விபர விளம்பரத்திலுஞ் சொல்லியபடி செய்து முடிக்கவேண்டும். அவைகளை ஆபிசில் கேட்டுப் பார்த்துக்கொள்ளலாம்.

சுகபரிபாலன சங்கத் தலைவர் குறைந்த அல்லது எந்தக் கேள்வியையாவது ஏற்பதற்குக் கடமைப்பட்டவரல்லர்.

சுகாதாரசங்கக்கந்தோர்,
திரிகோணமலை, ககூகசும் ஆடிமீ கசஉ.

விளம்பரம்.

கூறைச் சேலைகள்:—கும்பகோணம், தஞ்சாவூர் பட்டுச்சேலைகள், மதுரை கோயம்புத்தூர் சருகைச் சால்வைகள் மாத்திரம் கையிருப்பைக் குறைப்பதற்காக ரொக்கத்திற்கு வாங்குபவர்களுக்கு வருகிற புரட்டாசிமாசம் வரையும் புடவைகளில், குறித்த விலையிலிருந்து நூற்றுக்கு ஐந்து வீதம் கழித்து எங்கள் பெரியகடைச் சாய்ப்புகளில் மாத்திரம் விற்கப்படும்.

JAFFNA TRADING COY, LTD.

இந்துஸ்தான் ஐக்கிய வீமாக் கம்பனி.

இதன் பிரதான ஆபீஸ்: இந்துஸ்தான் கட்டடம், கல்கத்தா.

இதன் மூலதனம் பத்துக்கோடி ரூபா.

இந்தியாவிலே பங்காளிகளுக்கு அதிகலாபத்தைக் கொடுக்கக்கூடிய கம்பனி இதுவன்றி வேறில்லை. சனங்களின் சொத்தமாயுள்ள வீமாக்கம்பனி இதுவொன்றே.

இதில் வீமாதீர்ப்பவர்களுக்கு ஒருபோதும் நட்டம் வரமாட்டாது. அவர்கள் இக்கம்பனிக்கு வரும் லாபத்திலும் பங்குடையவர்களாவர்.

ஆண் பெண் என்னும் வித்தியாசமும், பயண வித்தியாசமும், தொழில்வித்தியாசமும், மரண வித்தியாசமும் இக்கம்பனியாரால் கவனிக்கப்படமாட்டாது.

பணங் கட்ட முடியாது தங்கள் "பொலிசிகளை" விட்டுவிடுவோர்க்கு மற்றக் கம்பனிகள் கொடுக்கும் தொகையிலும் பெருந்தொகை உடனே கொடுக்கப்படும். அல்லது அவர்களின் மரணத்தின்பின் அவர்களாற் குறிக்கப்படுவோர்க்குக் கொடுக்கப்படும்.

பணங்கட்டாதுவிட்ட "பொலிசி"களைக் காலவரையின்றி நினைத்தநேரத்திற் புதுப்பித்துக்கொள்ள இடங்கொடுக்கப்படும்.

கட்டப்படும் பணம் ஆருக்குக் கொடுக்கப்படவேண்டுமோ அவருடைய சொந்த வீட்டில் அது கொடுக்கப்படும்.

உத்தியோகஸ்தருள்ளும் சங்கத்திலும் நலேத்தமான பிரபுக்களிருக்கிறார்கள்.

இக்கம்பனிக்குக் கட்டவேண்டிய தொகை சிறிது, லாபமோ அதிகம்.

இக்கம்பனியிலும்பார்க்க ஒருவனின் சுயவிருத்திக்கு ஏற்றதாகத் தோற்றுமெதுவும் அனுப்புதலுக்கும் நட்டத்துக்கும் ஏதுவானதாகவேயிருக்கும்.

இக்கம்பனிக்கு அக்கிராசனாதிபதி: கோ[illegible] மகாராஜா மகிந்திரசந்திரநந்திபகதூர்.

செக்கிறிற்றெறி: சுரேந்திரநாத்தகூர் B. A., ஜமீந்தார்.

மற்றைய விபரங்கள் பின்சொல்லப்படுகிறவர்களுக்கு எழுதி அறிந்துகொள்ளலாம்.

(பருத்தித்துறைப்பகுதிக்கு முகாமைக்காரன்)
ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை.
யாழ்ப்பாணம் இந்துகல்லூரித் தமிழ்ப்பண்டிதர்,
வண்ணார்பண்ணை

M. A. தம்பு அண்ட் பிறதர்ஸ்
பிரதான முகாமைக்காரர்,
1 கெயிசர் தெரு, 13 B, 1-ம் குறுக்குத்தெரு,
கொழும்பு.

யாழ்ப்பாணத்துக்கு உப முகாமைக்காரர்: யாழ்ப்பாணம் வர்த்தகசங்கம்.

P. S. வீமாதீர்ப்பவர்கள் தாங்கள்கட்டவேண்டியபணத்தை நேரே எங்களுக்கு அனுப்பவேண்டும்.

இந்துசாதனம்.

யாழ்ப்பாணம்:- [illegible] ஆடி மீ ௨௨.

சிவ பரத்துவம். ௨.

கந்தபுராணம்.

பதிபரன் பாசந் தன்னிற் பட்டுழல் பசுக்க ளென்றே, விதியொடு மறைகள் கூறு மெய்ம்மையைத் தெளிய வேண்டி, னிதுவென வுரைப்பன் யாங்க ளிவ்வர சியற்ற வீர, னதிர்கழ லருச்சித் தேத்து மாலயம் பலவுங் காண்டி.

சிவபெருமான் ஒருவரே பதிப்பொருள்: ஒழிந்தோர் எல்லாம் பசுக்கள்: ஆதலாற்றான் அவருக்குப் பசுபதி என்னும் நாமம் யோகரூடியாக வந்தெய்திற்று. இந்த உண்மையை வேதங்கள் தாமே எடுத்துக்கூறும் என்று அந்த வேதங்களின் உண்மைப்பொருளை எடுத்துவிளக்கவந்த புராணங்கள் எடுத்துக்காட்டும் என்றால், நாம் சிவபரத்துவத்தைக் குறித்துப் பிறசாட்சியந்தேடுவது மிகையாகும். வேதங்களிலே ஒவ்வொரு காரணம்பற்றி எடுத்தோதப்படும் கடவுளர் எல்லாரும் சிவபெருமானை வழிபட்டு இட்டசித்திகளைப் பெற்றமைக்கு இந்தப் பூவுலகத்திலே அவர்களாற் பூசித்து வழிபடப்பெற்ற சிவாலயங்களே தக்கசான்றுகளாதலின், அவ்வெல்லார்க்கும் சிவபெருமானே முழுமுதற் கடவுள் என்பது தானே பெறப்படும்.

"தேவதேவன் மாதேவன் சிறப்புடை யீசனெங்கோன், மூவரின் முதல்வனேகன் முடிவிற்கு முடிவாய் நின்றோன், ஆவியு ளாவியாமோ னந்தண னிவனே யென்றே, ஏவரை யிசைத்த வயமா லெல்லையின் மறைகளெல்லாம்."

தேவர்களுக்கெல்லாம் தேவன் என்றும், மாதேவன் என்றும், ஈசன் என்றும், வேதபதி என்றும், மும்மூர்த்திகட்கும் முதற்கடவுள் என்றும், சர்வசங்கார தனி முதற்பொருள் என்றும், ஆன்மாக்களுக்கெல்லாம் பரான்மா என்றும், பரமவிருபாநு என்றும், எல்லாப்பொருளும் தோன்றுதற்கிடமாயுள்ளதென்றும் வேதங்கள் எல்லாம் சிவபரஞ்சுடரை எடுத்தோதும் என்றால் நாம் அந்தப் பரம்பொருளது பரத்துவ நிலையைக் குறித்துச் சந்தேகிப்பது நீதியாகுமோ?

"விதிமுத லாகியுள்ளோர் விபனுயிர்த் தொகையா மீசன், பதியவன் பசுபதனே பரித்தன ரிணைய ரெல்லா, மிதுவுமச் சுருதிவாய்மை."

பிரமாதிதேவர்கள் எல்லாரும் பசுவர்க்கத்துட்பட்டார் என்றும் சிவபெருமான் ஒருவரே பதிப்பொருள் என்றும் அந்தப் பிரமாதி தேவர்கள் செய்யுந் தொழில்களெல்லாம் பசுபதியாகிய சிவபெருமானுடைய ஏவல்வழிநின்று செய்யும் பணிகளாம் என்றும் அந்த வேதங்களே எடுத்துக்கூறும் என்றால் வேதங்களாற் பிரதிபாதிக்கப்படும் கடவுள் யார் என்று நாம் ஆராயலும் வேண்டுமோ கொல்லோ?

"வேதமே முதலாவுள்ள வியன்கலை யனைத்துந் தொன்னா ளோரிறை யவனே யென்றுட் குறித்திட வுரைக்குமன்றே, யீதுபெற் றிரித்தாண்டி."

வேதமுதலிய கலைகளெல்லாம் ஆதிகாலத்திற் றிருவாய்மலர்ந்தருளி அவற்றைப் பிரமாதிதேவர்களுக்கு உபதேசித்தருளினவர் அந்தச் சிவபெருமானேயாம் என்று அந்தவேதங்கள் தாமே எடுத்துக் கூறும் என்றால் அந்தவேதங்களாற் பிரதிபாதிக்கப்படும் கடவுள் யார் என்பது சொல்லாமே அமையுமென்றே!

"அருவி னீர்மையா லைந்தொழில் புரிபவ னாதி பரமனின் மலனே துவக்கேது வாம்பசு ளெனுநர் பாலினும் பிறக்கிடா னருவதா யுருவா யிருமையா யுறைபூரண னியாவர்க்கு மீசன்."

"மூர்த்த மாயினும் முடிவிற்கு முடிவா, யுற்று ளாதென்று முள்ளவ னனைத்தையு முடையோன், மற்றொன்று முரைப்பரிய சோர் சீர்த்தியாள் மலர்த்தாண், பற்றினோர்க்கன்றி யுணரவொண்ணாத தோர்பழையோன்."

"அன்னதோர் சிவன் பரமென மறையெலா மறையும், இன்னுமாங் கவனிலை யினைக்கண்ணனும்பாலும், முன்னவி நாடியுங் காண்கில மவன்பதி யொழிந்தோர், மன்னுயிர்த் தொகையென் றனன்னதோன் மலரோன்."

சிவபெருமான் ஒருவரே அருட்கொடையாளர், பஞ்சகிருத்திய கருத்தா, அநாதி நித்தியப்பொருள், மலரகிதர், மூலகாரணர், சாட்குண்ணியர், பிறப்பிறப்பில்லாதவர், அருவம், உருவம், அருவுருவம் என்னும் முத்திறவடிவங்களையுடையார், பூரணர், சருவகருத்தா, விசுவரூபர், காலகாலர், அழிவில்லாதவர், சருவாதிகாரி, வாக்குமனாதீதர், அடியார்க்கெளியர், அவரே பிரம விட்டுணுக்களுக் காண்டற்கரியர், அவர் ஒருவரே பதிப்பொருள் ஒழிந்தோர் எல்லாம் பசுக்கள் என்று வேதங்களெல்லாம் முழங்கும் என்றால் அவரை அவ்வேதங்கள் கடவுள் என்று எடுத்துக் காட்டவில்லை என்பது என்படும்! என்படும்!!

"ஆதலா லெங்க ளீசனே பரம்பொரு ளல்லா, வேதிலா ரெலாமுயிர்த் தொகையாகு மாவிதனைக், காதலா லுணர்த்தே னென்று வாய்மையே காண்டி, வேதமே முதலாகிய கலையெலாம் விளம்பும்."

இன்னபல நியாயங்களானும் சிவபெருமான் ஒருவரே பதிப்பொருள் ஒழிந்தோரெல்லாம் பசுவர்க்கத்துட்பட்டார் என்று வேதங்களும் பிறகலைஞானங்களும் எடுத்துக்காட்டும் எடுத்துக்காட்டும் என்று அவ்வேதங்களின் பொருட்கிடக்கையை விளக்கிக் காட்டப்புகுந்த புராணங்கள் கூறும் என்றால் அவ்வேதங்களின் உபதேசக் கிரமத்தை ஒருசிறிதேனும் அறியாத மந்தமதியினர் சிலர் திரண்டு சிவபரஞ்சுடரை வேதங்கள் கடவுள் எனக் கொள்ளவில்லை என்று பிதற்றும் பித்துரையைக் குறித்து யாது சொல்லலாம்!

கிறிஸ்துவின் போதனை.

(Communicated.)

௨௨. "பூமியின்மேல் சமாதானத்தை அனுப்பவந்தேன் என்று எண்ணாதிருங்கள்: சமாதானத்தையல்ல; பட்டயத்தையே அனுப்பவந்தேன்; எப்படியெனில், மகனுக்கும் தகப்பனுக்கும், மகளுக்கும் தாய்க்கும் மருமகளுக்கும் மாமிக்கும் பிரிவினை உண்டாக்கவந்தேன்." (மத்-௧௦-௩௪-௩௫) என்று கிறிஸ்து தாமே சொல்லுகிறார். பூமியில் சமாதானக்கேட்டை உண்டாக்கித் தகப்பனையும் மகனையும் தாயையும் மகளையும் மாமியையும் மருமகளையும் ஒருவர் ஒருவர் மாறுகொண்டு சண்டையிடச்செய்யும் ஒருவனை உலகரக்ஷகப் பிரியர் என்று சொல்வது எப்படி? இந்தக் கிறிஸ்துமதக்கொள்கையன்றோ இந்தக்காலத்திலே பாதிரிமார் செய்யும் சமாதானக் கேடுகளுக்கெல்லாம் பெருங்காரணமாய் அனேகசனங்கள் கிறப்பதப்படுதற்கு ஏதுவாய்க் கிடக்கின்றது. இந்தக் கேட்டுக்குக் காரணமாயுள்ள போதனையை நற்போதனை என்று உலகத்திலே எவராவது சொல்லுவாரா?

௨௩. "ஆண்டவரே! ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைத்துப் பாலகருக்கு வெளிப்படுத்தினபடியால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன்" (மத்.௧௧-௨௫) என்று கிறிஸ்து தமது பிதாவைத் தோத்திரிக்கிறார். இங்கே கிறிஸ்து 'ஞானிகள்' என்று குறித்திட்டது யாரை என்பது செவ்வையாகப் புலப்படவில்லை. ஆனாலும் அந்தச் சொல் கல்விமான்களைக் குறிக்கவில்லை என்பது அவர் பின்னுக்குக் கல்விமான்களை விதந்தெடுத்துக் காட்டியிருப்பதால் நன்குபெறப்படும். ஞானிகளுக்கு உண்மைகள் மறைக்கப்படுமாயின், அவர்களை ஞானிகள் என்பது எங்ஙனம்பொருந்தும்? ஆகவே கிறிஸ்துவுக்கு ஞானிகளாவார் யார் என்பது தெளிவுற விளங்கவில்லை என்பது நன்கறியக் கிடக்கின்றது.

இனி ஞானிகளுக்கு மறைத்துப் பாலகருக்கு அந்த உண்மைகளைக் கடவுளே வெளிப்படுத்தினார் என்பதும், அதன்பொருட்டாக கிறிஸ்து கடவுளைத் தோத்திரஞ்செய்தார் என்பதும் கிறிஸ்துவுடைய வாக்கால் இனிதறியக்கிடக்கின்றன. உண்மைகளை ஞானிகளுக்குக் கடவுள் மறைத்துவைப்பது தேவநீதியாகுமோ? கடவுளே உண்மைகளை மறைத்துவைப்பாராயின், அவற்றைக் காண வல்லார் யாவர்? அங்ஙனம் மறைத்துவைக்கும் கடவுளை இரக்கமுள்ளவர் என்று சொல்லலாமோ? இந்த இரக்கமற்ற செய்கைக்காகக் கிறிஸ்து கடவுளை ஸ்தோத்திரிக்கிறார். ஆகவே அந்தக் கிறிஸ்துவுடைய இரக்கமும் நாம் எல்லாம் நன்கறியக் கிடக்கின்றது அல்லவா? இனிப் பாலர்தாம் இந்த உண்மைகளை அறிவர் என்பது எங்ஙனம்? பாலருக்கு அறிவுவிருத்தி இல்லை என்பதன்றி அவர்களுக்கு உண்மைகளை அறியும் அறிவுவிசாலம் உண்டென்பது சிறிதாவது பொருந்தாதன்றே.

௨௪. "பிதாதவிர வேறொருவனும் குமாரனை அறியான்; குமாரனும், குமாரன் எவனுக்கு அவரை வெளிப்படுத்தச் சித்தமாயிருக்கிறாரோ, அவனுந் தவிர வேறொருவனும் பிதாவை அறியான்" (மத்-௧௧-௨௭) என்று கிறிஸ்து போதிக்கிறார்.

பிதா ஒருவரேயன்றிப் பிறர் ஒருவரும் குமாரனை அறியார் என்று கிறிஸ்துவே சொல்லிவிட்டுப் பின் அந்தக் குமாரனை அறியாத சனங்களை எல்லாம் நித்தியநரகத்துக்குஆளாக்குவது நீதியாகுமோ? குமாரன் வெளிப்படுத்தினாலன்றி யார் ஒருவரும் பிதாவை அறியார் என்று கிறிஸ்துவே சொல்வதனால், பிதாவைச் சனங்கள் அறியாமைக்குக் காரணம் அவர்களுக்கு அப்பிதாவைக் கிறிஸ்துவாகிய குமாரன் வெளிப்படுத்தாமையே என்பது நனகு புலப்படும். பின் சனங்கள் பிதாவை அறியாமைக்கேது தமதுகுற்றமேயாகவும் அதன்பொருட்டுச் சனங்களைத்தண்டிப்பது நீதியாவது எப்படியோ?

௨௫. "அங்கே சூம்பின கையையுடைய ஒருவன் இருந்தான். அப்பொழுது அவர் மேலே குற்றஞ்சாட்டும்படிக்கு ஓய்வுநாளில்சொஸ்தமாக்குகிறது நியாயமா என்று கேட்டார்கள். அதற்கு அவர் உங்களில் எந்த மனுஷனுக்காகிலும் ஒரு ஆடு இருந்து அது ஓய்வுநாளில் குழியில்விழுந்தால், அதைப் பிடித்துத் தூக்கிவிடமாட்டானோ" (மத். ௧௨-௧௦-௧௧) என்று கிறிஸ்து கேட்டாராம். இந்தஉபமானம் சிறிதாவதுபொருந்தவில்லையே. ஆடு குழியில் விழுந்தால், அதைத் தூக்கிவிடவேண்டியது அவசியமே. அதைத் தூக்காவிட்டால் அது உடனே மரித்துவிடும். ஆகவே ஓய்வுநாளில் அந்தச்செயலைச் செய்வது குற்றமாகாது. சூம்பினகையையுடையானை ஓய்வுநாளில் சுகப்படுத்தவேண்டியது அவ்வளவு அவசியமல்லவே. அவன் எவ்வளவோகாலமாகச் சூம்பினகையனாகவே இருந்தான். அவனை அந்த ஓய்வுநாட்கழியுமட்டும் பொறுத்திருக்கும்படி கேட்பது தவறாகமாட்டாதே. அங்ஙனம் கேட்டால் அவனுக்கு ஓய்வுநாளின் பரிசுத்தத்தை மனத்தில் அழுத்தியவாறுமாம் அன்றே. அங்ஙனமின்றி அவனுக்கு அவனதுகையைச் சுகப்படுத்தலாகிய ஒரு லௌகிகபயன்கருதிக் கடவுளுடைய கட்டளையை அலட்சியஞ் செய்வது கிறிஸ்துவுக்கு நீதியாகுமேயோ?

சமாசாரம்.

கால நிலை:—சென்ற வெள்ளிக்கிழமை இரவு பெருமழை யாழ்ப்பாணத்தின் பலபாகங்களிலும் பெய்தது. சமையம்பார்த்திருந்த கமக்காரர் இப்பொழுது வயல்களை உழுகின்றனர். சென்றசெவ்வாய்க்கிழமை ௧ மணி தொடக்கம் அன்று இரவு அ மணிவரையிற் பெருங் காற்று வீசியதால் பல மரங்கள் வீழ்ந்தன. சில வீடுகள்மீதும் மரங்கள் வீழ்ந்து அதிகம் நஷ்டத்தை விளைத்தன. சில வாரங்களுக்குமுன்னர் அதிகமாகப் பரவியிருந்த சின்னமுத்து இப்பொழுது குறைவுற்றுவருகின்றது.

தானவரவு:—முடிக்குரிய தரணியும், சமாதான நீதிவானும், கண்ணியப் பொலிஸ்நீதிவானுமாயிருந்து சிலவாரங்கட்குமுன்னர்க் காலஞ்சென்ற ஸ்ரீ T. C. சங்கரப்பிள்ளை அவர்களின் அபரக்கிரியையில் யாழ்ப்பாணஞ் சைவபரிபாலன சபைக்குத் தானமாய் வரிந்தனுப்பிய ரூபா 1 பெற்றோம்.

யாழ்ப்பாணச் சீனிக் கம்பெனியார்:—இக்கம்பெனியாரால் வல்லுவெட்டித்துறையில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் சீனித் தொழிற்சாலையில் வருகிற ஆகஸ்ட் [illegible] தொடக்கம் சீனி செய்யப்படுமெனத் தெரிவிக்கப்படுகின்றது. இவர்கள் நாள் வீதம் 20 தொடக்கம் 30 தொன் வரையிற் சீனி செய்வார்களாம்.

தற்கொலை:—சில தினங்கட்கு முன்னர் அச்சுவேலியில் ஓர் கன்னிகை, தன் பெற்றோர் தனது விருப்பத்திற்கு மாறாக, பொருளை விரும்பி ஓர் [illegible] தனக்கு மணம்பேசி நிச்சயித்தமையால் மனஸ்தாபமுற்று ஒருவருமறியாதபடி ஓர் கிணற்றுள்வீழ்ந்து உயிர்துறந்தனளாம்.

கதாப் பிரசங்கம்:—சென்ற ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ௩ மணி தொடக்கம் மானிப்பாய் இந்துகல்லூரி மண்டபத்தில் சிவகாமசங்கீர்த்தனலங்காரிய பஜனையும் ௬ மணிதொடக்கம் ௭ மணிவரையும் ஸ்ரீ. மாணிக்கத்தியாகராசா அவர்களால் மிருதங்கம் முதலிய வாத்தியங்களோடு இராசநாதஞ் செய்த திருவிளையாடற் சரித்திர கதாப்பிரசங்கமுஞ் செய்யப்பட்டன. அங்கு வந்து சேர்ந்தோரனைவரும் மிக்க களிப்போடு சென்றனர்.

சுப்பிறீங் கோடு:—இரண்டாவதாகத் திரிகோணமலைக் கள்ளக் கையெழுத்து வழக்கு விளக்கப்பட்டது. இதில் எதிரிகள் இருவரும் தனித்தனி ஆறுமாசக் கடுஞ்சிறை விதிக்கப்பெற்றனர். கல்லூரில் வசிக்கும் வேலன் என்பவன் சகோதரனை அடித்துக் கொன்றான் என்ற வழக்கு மூன்றாவதாக விளக்கப்பட்டது. இவன் கைபிழைபாட்டுக் குற்றவாளியெனக் காணப்பெற்று நான்குவருடக் கடுங்காவல் விதிக்கப்பெற்றான். நான்காவதாயுள்ள மட்டக்களப்புக் கள்ளக் கையெழுத்து வழக்கு ஏதோ சிலகாரணத்தினால் அடுத்தமுறைச் சுப்பிறீங்கோட்டில் விளங்கும்படி தவணைபோடப்பட்டது. நவாலிக்கொலைவழக்கு ஐந்தாவதாக விளக்கப்பட்டது. இதில் நவாலியில்வசிக்கும் நாகமுத்து, முத்துக்குமாரு, உலகன் என்னும் மூவரும் முதலாமெதிரி மச்சம் விற்கும் ஒருத்தியிடம் உறிகதம் பெறக்கூடிய இரு மச்சங்களைத் திருடினனென்றும், இரண்டாம் மூன்றாம் எதிரிகள் அந்த மச்சம் விற்பவளின் இனத்தவனாகிய செல்லப்பா என்பவனைக் கொலைசெய்தார்களென்றும் மூவருங் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தனர். இதில் மூன்றாமெதிரி மாத்திரம் கைபிழைபாட்டுக்கொலைக் குற்றவாளியெனக் காணப்பட்டு ௩ வருடக் கடுந்தண்டனை விதிக்கப்பட்டான். மற்றவிருவரும் விடுதலையடைந்தனர். யாலையிறவு வாடைவீட்டைப் பராமரிக்கும் அந்தோனிப்பிள்ளை யென்பவன் மதுமயக்கத்தால் துப்பாக்கிகொண்டு ஓர் கூலிக்காரனைச் சுட்டுக்கொல்ல முயன்றான் என்னும் குற்றச்சாட்டின்பேரிலுள்ளவழக்குஆறாவதாக விளக்கப்பட்டது. இதில்இவன் தான் குற்றவாளியென ஒத்துக்கொண்டமையால் ௬ மாசக் கடுங்காவல் விதிக்கப்பெற்றான். ஏழாவதாக, சுளிபுரத்தில் ஒருவன் ஓர் பள்ளனைக் கல்லால் எறிந்து விலாவில் ஊறுபடுத்திக் கொன்ற வழக்கு விளக்கப்பட்டது. இவ்வழக்கிலும் எதிரி தன்னைக்குற்றவாளியென்று சொன்னான். எதிரிபக்கத் தரணி அவன் குற்றவாளியாயினும் அவன் முன்னர் நன்னடக்கையுள்ளவனென்றும், அவன் தான்செய்த குற்றத்தை ஒப்புக் கொண்டானென்றும் மரித்துப்பசினமையால் அவன் ௩ வருடக் கடுஞ்சிறை விதிக்கப்பட்டான். வரணியைச் சார்ந்த இடைக்காட்டிலிருக்கும் சின்னையா, கதிர்காமு என்னும் இருவர் கரச்சியிலிருந்த வேலாயுதர் குரியர் என்பவரைப் பொல்லாலடித்துக் கொன்றனர் என்னும் வழக்கு எட்டாவதாக விளக்கப்பட்டது. இதில் எதிரிகளிருவரும் சுத்தவாளிகளெனக் காணப்பட்டு விடுதலையடைந்தனர். கடைசியில், காரைதீவு விதானையின் [illegible] என்னும் தச்சன் உழியாற் குத்திக் கொன்ற வழக்கு விளக்கப்பட்டது. இதில் எதிரி கொலைக்குற்றவாளியெனக்காணப்பட்டுத் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டான்.

கோப்பறா:—இது இப்பொழுது கண்டி யொன்றுக்கு ௫௧ ரூபாவரையில் விலைப்படுகின்றது.

தீப்பெட்டி:—டென்மார்க்கின் தலைநகராகிய "கொப்பனேகன்"லிருந்து "சம்பொன்"என்னும் கப்பல் மூலமாக அதிகத்தொகையான தீப்பெட்டிகள் சென்றவாரம் கொழும்பில் இறக்குமதியாயின.

கஞ்சாவைத்திருந்தவர் அபராதம் விதிக்கப்பெற்றமை:—வதுளையில் இரு சிங்கள வைத்தியர்கள் கஞ்சா வைத்திருந்தார்கள் என்னும் குற்றக்காரணமாகத் தனித்தனி 100 ரூபா அபராதம், அதை இறுக்கத் தவறின் ஒருமாசக் கடுஞ்சிறை விதிக்கப்பெற்றனர்.

சிறப்புமார் நியமனம்:—கொழும்புத் திறைசேரிச் சிறப்பர் ஸ்ரீ K. தம்பையா அவர்கள் தமது உத்தியோகத்தினின்றும் இளைப்பாறுகின்றமையால் அவரது இடத்தில் கொழும்பு ரோசு சிறப்பர் ஸ்ரீ. செல்லையா அவர்களும், இவரது இடத்தில் கண்டிக் கச்சேரிச் சிறப்பர் ஸ்ரீ. கந்தையா அவர்களும் நியமிக்கப்படுவோர்கள்.

பதினையாயிரம் ரூபா வெகுமதி:—இந்தியாவிலே புவனபூர் என்னுமிடத்தில் பாக்குபார் சற்றேர்ஜி என்னும் உதவிப் பொலிஸ் சப்பெறின்றனைச் சுட்டுக்கொன்றவனைக் காட்டிக்கொடுப்போர்க்கு 15,000 ரூபா வெகுமதி கொடுக்கப்படுமென பங்காள அரசினர் விளம்பரப்படுத்தியிருக்கின்றனர்.

காகிதம்:—இப்பொழுது நிகழும் யுத்தம் காரணமாக அச்சடிக்கப்படும் காகிதங்களும் மற்றுங் காகிதங்களும் நாளொருவண்ணம் விலையேறிக்கொண்டுவருகின்றன. இந்தியாவில் காகிதஞ்செய்யுஞ்சாலைகள் ஆக 7உள்ளன. இவற்றுள் 1 பங்காளத்திலும் 2 பம்பாயிலும் 1 ஐக்கியமாகாணத்திலும் 1 காலியவாரிலும் உள்ளன. இவற்றுள் செய்யப்படும் காகிதங்கள் இந்தியாவின் காகிதச்செலவுக்குப்போதாமலிருத்தலால் இந்தியாவின் இன்னும் பலவிடங்களிற் காகிதயந்திரசாலைகளை ஸ்தாபித்து வேண்டியகாகிதங்களைச்செய்தல் நலமாகுமென இந்தியதேசாபிமானியாகிய "பாபு" சுரேந்திரநாத் பானர்ஜியவர்கள் தெரிவிக்கின்றனர்.

கிரேக்கஅரசரின் அரண்மனை தீக்கிரையானது—அதனகப்பட்டணத்துச்சமீபத்திலுள்ள ஓர் காட்டில் நெருப்புப்பற்றி எரிந்தபோது இராசாவின் அரண்மனையிலும் தீப்பற்றி அதுமுழுதுமெரிந்துபோனது.

சிதம்பரம்
ஞானப்பிரகாச திருக்குளம்.

இத்திருக்குளப் படித்துறைத் திருப்பணித் தருமத்துக்குப் பொருள் உபகரித்தோர் பெயருந் தொகையும்:—

(1-ம் இலக்கப் பத்திரிகைத் தொடர்.)
நேரில் வரவு.

ஸ்ரீ.	ரூ. ச.
சித. மு. ப. சிதம்பரநாதச் செட்டியார் வண்ணார்பண்ணை (ஆறாம் முறை)	3-50
ஷையார்மூலமாக க. கனகசபை சக்குவேலி	5-50
ஆ. கனகரத்தினம் தரணி யாழ்ப்பாணம்	10-00
ஆ. சரவணமுத்து முதலியார் கோப்பாய்	10-00
ஷையார் மூலமாய்	
வை. செல்லையா மணியகாரர் நெடுந்தீவு	10-00
த. வேலாயுதம் கச்சேரி யாழ்ப்பாணம்	2-50
அ. ஐயாத்துரை ,,	2-00
க. சிதம்பரப்பிள்ளை ,,	5 00
இ. அருமைநாயகம் ,,	2-00
பா. சி. நீக்கிலாஸ் முதலியார் ,,	2-50
இ. சிந்தாமணி ,,	2-00
க. சிவசிதம்பரம் ,,	2-50
எஸ். வீரசிங்கம் ,,	1-50
க. இராமுப்பிள்ளை ,,	5-00
எம். திருவம்பலம் சுன்னாகம் விதானை	1-25
வ. அம்பலவாணர் மூளாய் விதானை	2-50
ஆர். முத்துசாமி புத்தூர் விதானை	2 50
எஸ். முத்துத்தம்பி கச்சேரி யாழ்ப்பாணம்	2 50
ஆ. தில்லையம்பலம் நீராவியடி	20-00
ப. சின்னத்துரை வைத்தியர் நல்லூர் இரண்டாம்முறை	5-00
ஆர். முருகேசு கோலாலம்பூர்	5-00
A. சுப்பிரமணியம் ,,	3-00
அழுகொல்லை க. வேலுப்பிள்ளை மூலமாய்	
ஆ. கதிர்காமர்	1-00
க. லெட்சுமி அம்மாள்	1-00
க. சோமசுந்தரம்பிள்ளை	2-00
க. ஆறுமுகம்பிள்ளை	1-00
க. சரவணமுத்து	1 00
சோ. சின்னம்மாள்	1-00
ஆ. இராசம்மாள்	1-00
பொ. மனோன்மணி அம்மாள்	1-00
க. பொன்னுத்துரை	1-00
சோ. பாலசுப்பிரமணியன்	1-00
சோ. திருஞானசம்பந்தன்	1-00
பொ. குமாரசுவாமி	1-00
க. வேலுப்பிள்ளை நாலாம்முறை	2-00
கொழும்பில் கா. தம்புவாயிலாக 3-ம் முறை வரவு.	
கா. தியாகராசக் குருக்கள்	10-00
எஸ் இராசரத்தினம் புறோக்கர்	10-00
வெ. கா. சின்னத்தம்பி வியாபாரம்	10-00
சிவநேசன்	25-00
க. சுந்தரம்	20-00
த. ச. கந்தையா	10-00
கே. சிவராமு புறோக்கர்	5-00
க. ஆறுமுகம் புறோக்கர்	5-00
சி. சின்னத்தம்பி புறோக்கர்	5-00
வி. இ. பொன்னம்பலம் புறோக்கர்	5-00
ச. சண்முகம் வர்த்தகர்	5-00
எஸ். சோமசுந்தரம் பிறக்டர்	5 00
எ. சுந்தரம் புறோக்கர்	5-00
வே. ச. நாகலிங்கம் யாழ்ப்பாணம் வண்-கிழ	5-00
சீ. சி. கந்தையா பிறக்டர் 2-ம் முறை	5-00
ச. சுப்பிரமணியம்	5-00
சி. சின்னத்தம்பி	5-00
கே. காராளபிள்ளை புறோக்கர்	5-00
எம். செல்லையா ரேகுசு சிருப்பர்	5-00
இராமலால்மகாராஜா பெண் சிவப்பிரகாச அம்மாள்	5-00
வீ. சங்கரப்பிள்ளையும், மு. மயில்வாகனமும்	5-00
கா. பொன்னையாக் குருக்கள்	5-00
அ. அப்பையா கிளார்க்	5-00
த. முருகேசு	3-00
திருநாவுக்கரசு மனைவி	2 00
அ. வே. செல்லப்பா	1-00
சிவக்கொழுந்து	3 00
V. C கனகசபை, கொழும்பு. செ. அப்புக்குட்டி மூலமாய்	5-00
மு. வேலுப்பிள்ளை, டிரெயினேஜ்வொர்க்கு கொழும்பு.	25-00
S. இளையதம்பி, மாதம்பட்டி கொழும்பு.	2-00
இந்துசாதன மானேசர் மூலமாய்	
அ. க. சின்னக்கதிர்காமன் பிள்ளை, உடப்பு.	5-00
க. சொக்கலிங்க உபாத்தியாயர், ,,	1-00
அ. ஐயம்பெருமாள், ,,	1-00
சி. இளையதம்பி உபாத்தியாயர், ,,	1-00
க. வைரய்யாபிள்ளை, ,,	2-00
கா. தம்புமூலமாய்.	
பொ. கா. சோமசுந்தரம், தாவடி. (2-ம்முறை)	5-00
இ. ஐயாக்குட்டிஐயர், (1-ம் முறை) தாவடி.	5-00
மு. சரவணை, ,,	2-50
ஆ. சரவணமுத்து, ,,	5-00
மு. குமாரு. ,,	1-00
ச. ஆறுமுகம், ,,	1-00
இ. கந்தர், ,,	2-50
க. ஆறுமுகம், ,,	1-00
வை. கந்தையா, ,,	1-00
செ. சுப்பிரமணியக்குருக்கள், நல்லூர். (1-ம் முறை)	5-00
தா. கா. கார்த்திகேசு, தாவடி.	2-00
சி. கு. கனகசபை, ,,	5-00
மு. வைத்தியலிங்கம், ,,	2-00
கா. த. சோமசுந்தரம், வண்-கிழக்கு.	10-00
கா. மயில்வாகனம், கந்தாவில்	2 50
வ. கந்தையா, திருநெல்வேலி.	10 00
கா. இராமலிங்கம், ,,	5-00
ம. வல்லிபுரம், கொக்குவில் மேற்கு.	4-00
V. ராமலிங்கம், ,,	5-00
க. தம்பாபிள்ளை, கொத்தாரில் கொக்குவில்.	5-00
வ. தம்பு. வண்-கிழக்கு.	5-00
வை. ஆறுமுகம்பிள்ளை, மணிகை வண்-மேற்கு (2-ம் முறை.)	10-00
க. ஞானசேகரம்பிள்ளை, J. P. சிருப்பர் கொழும்பு. (2-ம் முறை)	500-00
	936-25
முன் வெளிப்படுத்திய தொகை:	2295-99½
ஆகத் தொகை:	3232-24½

இங்ஙனம்,
[illegible] ஆனிமீ. க. பொன்னம்பலவன்,
சைவப்பிரகாச வித்தியாசாலை,
சிதம்பரம்.

தந்திச் சமாச்சாரம்

(யுத்தசங்கதிகள்)

ஜூலைமீ 11உ.

பிறிட்டிஷ் ஆகாயக் கப்பல்கள் சத்துருக்களின் புகையிரதஸ்தானங்களிலும், யுத்தக்கருவிச் சாலைகளிலும், அவர்கள் ஆகாய ரதங்கள் செய்யுமிடங்களிலும் குண்டுகளைப் பொழிந்தன. இருபக்கக் கப்பல்களும் ஆகாயத்தில் பல சண்டைகள் செய்தன. இச் சண்டைகளில் சத்துருக்களின் கப்பல்கள் பல கீழே விழுத்தப்பெற்றுப்பழுதடைந்தன.

சோம்னியிலே பெரும் ஆகாயக்கப்பற் சண்டை நடந்தது. பிரஞ்சு ஆகாயக்கப்பல்கள் ஜர்மன் ஆகாயக்கப்பல்களையெதிர்த்து யுத்தம் செய்தபோது நாலு ஜர்மன் கப்பல்கள் சத்துருக்களின் அணியில் வீழ்த்தப்பட்டன.

நேற்று பிறிட்டிஷ் சைனியம் பெரும் வெற்றியடைந்தது. "கொன்தல் மெயிசன்" என்னுமிடத்தில் அது பெரும் தைரியத்துடன் சத்துருக்களின் அகழ்களுட் புகுந்து அவர்களைத் துரத்திற்று. பிறிட்டிஷ் காலாட்படை ஒன்று மாமத்ஸ் காட்டுக்குள் புகுந்தது.

பிறிட்டிஷ் காலாட்படை "கொன்தல் மெயிசன்"என்னுமிடத்தைத் திரும்பப்பிடித்தபோது ஜர்மனியர் மும்முரமாயெதிர்த்து யுத்தஞ்செய்தார்கள். ஆனாலவர்கள் அதிக சேதமடைந்து பின்காட்டினர். கிழக்குப்பக்கத்தில் 'மாமத்ஸ்' காட்டில் பின்னும் பல அகழ்களிலிருந்து சத்துருக்கள் துரத்தப்பட்டார்கள். இக்காட்டின் பெரும்பகுதி இப்போது பிறிட்டிஷ்காரர்கையிலிருக்கின்றது. 'துரோன்ஸ்காட்டில் பெரியசண்டை நடக்கின்றது.

வேடனுக்கு வடக்கே "விரேயிட்டெரி' "புளூதி' "பியுமின்'காடு என்னுமிடங்களில் அகோரயுத்தம் நடக்கின்றது.

சோம்னிக்கு இருபக்கத்திலும் யாதும் சண்டை சென்ற இரா நிகழவில்லை. சோம்னிக்குத் தெற்கே ஜூலைமீ 9உ தொடக்கம் பிரிட்டிஷ்காரர் 1300 பேரைக் கைதிகளாகப் பிடித்தார்கள். சத்துருக்கள் மியூசுக்கு இடப்பக்கத்தில் குண்டுகளைப் பொழிந்து புளூரியென்னுமிடத்தைத் தாக்கி பியூமின்வென்னுமிடமதற்குக்கிழக்கேயுள்ள 'வீசிஹேபஸ்'என்னும் காட்டைப்பிடித்தார்கள். ஆனால் உடனே அதினின்றும் துரத்தப்பட்டார்கள். லொரேயின்வென்னுமிடத்தில் சத்துருக்கள் 200 மீற்றர் தூரத்துக்குப் புகுந்தார்கள்.

ஜூலைமீ 12உ.

இத்தாலியர் 'தெறனதிரோ' வென்னுமிடத்தில் நெருங்கிக்கொண்டமையால் அவுஸ்திரியர் தாம் கிழக்குப்பக்கத்துக்கு அனுப்பியசேனையை, அது ஏறக்குறையமுக்கால்வழி தூரம்போனபின், திருப்பி அழைத்திருக்கிறார்கள்.

ஸ்தொக்கொட் என்னுமிடத்தில் யுத்தம் நடக்கின்றது.

கிம்பொலங் என்னுமிடத்துக்கு வடகிழக்கிலே ருஷியர் சத்துருக்களின் நீளான சேனையைத் துரத்தினார்கள். கொகதேஷிபஸ் காட்டிலும் அவர்கள் விரைந்து முன்னேறிச் செல்கின்றனர்.

போல்றிக்கடலிலே ருஷ்யர் 2 ஜர்மன் வியாபாரக் கப்பல்களைப் பிடித்தார்கள்.

'டியூச்லென்' என்னும் சப்மெறயின் கப்பல் ஓர் ஜர்மன் கம்பெனியாரால் வியாபாரப்பொருட்களை ஏற்றிச் செல்லுவதற்குச் செய்யப்பட்ட கப்பல்களிலொன்று. இதையன்றி 'பிறீமன்' என்னும் வேறொரு கப்பலும் செய்யப்பட்டிருக்கின்றது. இது இப்போது துறைமுகத்தை விட்டுப் புறப்பட்டிருக்கின்றது.

ஸ்தொக்கொட்என்னுமிடத்தில் யுத்தம் நடைபெறுகின்றது. சத்துருக்கள் அதிக மும்முரங்காட்டுகின்றனர். அவர்களின் ஆகாயக் கப்பல்கள் ருஷியரின் பின்னணியில் அனேக குண்டுகளைப் பொழிகின்றன. மற்றைய இடங்களில் யாதும் வித்தியாசமில்லை.

அடிறியாற்றிக்கடலிலே ஒரு அவுஸ்திரிய குறிசர் இரண்டு பிறிட்டிஷ் 'பேத்திறல்' கப்பல்களை நீரிலமிழ்த்தி இரண்டைச் சேதப்படுத்திற்று. இக்கப்பல்களிலிருந்தவர்களுள் 10 பேர் கொல்லப்பட 9 பேர் காயமடைந்தார்கள்.

ஜர்மனியர் மியூசுக்கு வலப்பக்கத்தில் பலமுறை மும்முரமாயெதிர்த்து யுத்தம் செய்து டவ்றா என்னுமிடத்திலும் பியுமின் காட்டிலும் சில இடங்களிற் புகுந்தார்கள்.

மியூசுக்கு வலப்பக்கத்தில் மும்முரமாயும் இடப்பக்கத்தில சிறிது தணிவாயும் குண்டுப்பிரயோகம் நடைபெற்றது. சொம்னியிலே 14 ஆகாசச் சண்டைகள் நடைபெற்றன. சத்துருக்களுடைய நாலு ஆகாயக்கப்பல்கள சேதமுற்றுக் கீழேவிழுந்தன. திங்கட்கிழமை இரவு பிரான்சு ஆகாயக் கப்பல்கள் 220 குண்டுகளைச் சத்துருக்களின் அணியில் பலவிடங்களிற் பொழிந்தன.

பத்துநாள் இராப்பகலாக இடைவிடாது யுத்தஞ்செய்து பிறிட்டிஷ் சைனியம் ஜர்மனியரின் முதலணியில் 14,000 யார்வரையிற் பிடித்தது.

மோதம்பி என்னுமிடத்தில் ஜர்மனியர் இருமுறை பிரான்சச் சைனியத்தை யெதிர்த்து யுத்தஞ்செய்தபோது துரத்தப்பட்டார்கள். லேயின் காட்டுக்குக் கிழக்கே ஜர்மனியர் பிடித்திருந்த இடத்தைப் பிரான்சியர் திரும்பப் பிடித்தார்கள். இங்கே 80 பேர் கைதிகளாகப் பிடிக்கப்பட்டார்கள். நீலன் லொறேயின் என்னுமிடங்களில் ஜர்மனியர் புகுந்த சிலஅகழ்களிலிருந்து பிரான்சுச் சைனியம் அவர்களைத் துரத்திற்று.

இரா 10½ மணிவரையில் ஒரு ஜர்மன் சப்மெறயின் கப்பல் இங்கிலாந்திலுள்ள 'சீகாம்' என்னும் சிறு துறைமுகத்துக்கு நூறுயார் தூரத்திலே தோன்றி பட்டினத்துக்கெதிரே 30 குண்டுகளைப் பொழிந்தது. இவைகளில் 2 குண்டுகள்வரையில் 'டல்ற்றன்லேடேல்' என்னுமிடத்தில் விழுந்தன. 12 குண்டுகள் வரையில் சோமில் கிறிஸ்டி எடுக்குமிடத்தில் வீழ்ந்தன. ஒரு ஸ்திரீ காயமுற்று மரித்தனள். ஒருகுண்டு ஒருவீட்டில் வீழ்ந்தது. வேறு சேதமுண்டாகவில்லை.

சத்துருக்கள் புதிய சேனைகளை அழைப்பித்து பலவிடங்களில் பிரிட்டிஷ் சைனியத்தை எதிர்த்து மும்முரமாய் யுத்தஞ்செய்தார்கள் ஆனால் மாமத்ஸ் காட்டிலும் துரோன்ஸ்காட்டிலும் சிறுஇடங்களைப்பிடித்ததன்றி வேறு இடங்களில் அவர்கள் யாதும் ஜெயமடையவில்லை.

ஜூலைமீ 13உ.

ருஷியர் எர்ஸ்ரூம் என்னுமிடத்துக்கு மேற்கே துருக்கியர் நிஷ்கிரையாக்கிவிட்டுச் சென்ற மாம்காட்டும் என்னும் பட்டினத்தைப் பிடித்தார்கள்.

ஸ்தொக்கொட் என்னுமிடத்தில் மும்முரமான யுத்தம் நடைபெறுகின்றது. சத்துருக்கள் திரும்பவும் ஆற்றைக்கடக்க எத்தனித்து அனுகூலமடையவில்லை.

ருஷிய சேனாதிபதி சீனரையும் கொரியா தேசத்தவர்களையும் சேனையிற் சேர்த்துக் கொள்ளும்படி கட்டளை செய்திருக்கின்றனர்.

சத்துருக்கள் இத்தாலியரை "வலகஸ்நக்கா" என்னுமிடத்துக்கு வடக்கே எதிர்த்து யுத்தம் செய்து ஜெயமுறாது பின்காட்டினர்.

தங்கள் பட்டாளங்களை விட்டொளித்தோடிய ஒன்பதினாயிரம் அவுஸ்திரிய புல்கேரிய சேனவீரர் இப்போது ருமேனியாவிலடைபட்டிருக்கிறார்கள்.

பிறிட்டிஷ் சைனியம் முன்னேறி யுத்தம் செய்யத் தொடங்கியபின் நட்டமுண்டாகி இருக்கின்றதென்றும் யுத்தகருவிகள் இப்போது அதிகம் செய்யப்பட்டிருப்பினும் பிறிட்டிஷ் சைனியம் இந்த யுத்தத்தில் முழுதும் ஜெயமடைதற்கு இன்னும் யுத்தகருவிகள் அதிகமாக வேண்டியிருப்பதால் பெருநாட்களிற்றானும் யுத்தகருவிச்சாலைகளில் வேலை செய்யவேண்டுமென அஸ்குவித் மந்திரியார் பாளிமேந்துச்சபையிலே சொல்லினர்.

ஜூலைமீ 14உ.

புக்கவீனவிலே ருஷியரடைந்த வெற்றியின்பின் கிரீசு தேசத்திலே சிலவிடங்களில் சனங்கள் ஐக்கிய அரசுகளோடு சேரும் சார்புகொண்டு நிற்கின்றனர்.

ஜூலைமீ 15உ.

பிரிட்டிஷ் சைனியம் சத்துருக்களின் 1-ம் 2-ம் அணிகளைக் கடந்து இப்போது 3-ம் அணியிற் புகுந்திருக்கின்றது. பிறிக்கூட்டிலும் மாமத்ஸ் காட்டிலும் யுத்தமாரம்பித்த காலமுதல் இதுவரை 10,000 ஜர்மனியர் கைதிகளாகப் பிடிக்கப்பட்டார்கள் அதிக யுத்தகருவிகளும் பிரிட்டிஷ்காரர் கைவசப்பட்டன.

ஜூலைமீ 11உ-யும் 12உ-யும் பிரிட்டிஷ் சைனியம் சத்துருக்களின 2-ம் அணிக்குள திரே குண்டுகளைப் பொழிந்து 14உ இரவு 3½ மணியளவில் எதிர்த்துயுத்தஞ்செய்தபோது சத்துருக்கள் தங்கள் முன்னணி முழுவதிலுமிருந்து துரத்தப்பட்டார்கள். துரோனஸ் காட்டில் தங்கள் பட்டாளத்திலிருந்து பிரிந்து சத்துருக்களால் சூழப்பெற்ற ஓர் பகுதிச் சேனவீரர் மீட்கப்பட்டனர். இவர்கள் 44 மணித்தியாலமளவாகச் சத்துருக்களை எதிர்த்துநின்று யுத்தஞ்செய்தார்கள்.

ஜூலைமீ 16உ.

ஜூலைமீ 12உ கொறிலண்ட் என்னுமிடத்திற்குச் சமீபமாக ஓர் கடற்சண்டை நடந்ததெனச் சொல்லப்படுகின்றது.

றிக்காப்பக்கத்திலே ருஷியரின் வலதணி பீரங்கிப்படையினதும் யுத்தக்கப்பல்களினதும் உதவிகொண்டு கொம்மேர்ண என்னுமிடத்துக்கு மேற்கே சிறிது முன்னேறிற்று.

பிரான்சுக்குச் சென்றிருந்த ருஷிய சேனவீரர் சத்துருக்களின் அகழ்களைத் தாக்கிச் சில ஜர்மன் சேனவீரரைப் பிடித்தார்கள். பிடிபட்ட ஜர்மன்சேனவீரர் தம்மைப் பிடித்தவர்கள் ருஷிய சேனவீரரெனக்கண்டபோது பேராச்சரியமடைந்தார்கள்.

போட்டுக்கல் அரசினர் பிரான்சுக்கும் மற்றை இடங்களுக்கும் தங்கள் சேனையை அனுப்பி ஐக்கிய அரசினருக்கு உதவிசெய்ய ஆயத்தப்படுகின்றனர்.

ஜூலைமீ 17உ.

பாளிமேந்து அங்கத்தவர்களு ளொருவராகிய மெஸ், கின்னல் என்பவர் கரஸ்லோர்ட் என்னுமிடத்தில் பிடிக்கப்பட்டடைக்கப்பட்டார்.

சிலவேஸ்றன் என்னும் பிரிட்டிஷ் கப்பலும், லச்சிபா, தல்றோ சிலவி என்னும் கப்பல்களும் நீரிலமிழ்த்தப்பட்டன.

கடிதம்.

பழங்குடியார் தோல்வி.

—o—

அறிஞர்காள்!

பழங்குடியார் வேதத்திலே சிவன் என்ற தெய்வம் இருப்பதற்குப் பிரமாணங் காட்டவேண்டுமென்று வினவியதற்கு நாம் அவ்வேதத்திலே பிரமாணம் காட்டியதை நீங்கள் யாவருமறிவீர்கள். பழங்குடியார் அப்பிரமாணங்களை மறுக்கமுடியாது தோல்வித்தானமுற்றுநின்றும் "வீழ்ந்தும் மீசையில் மண்படவில்லை" என்றவன்போல யான் உமாசமேதரான சிவபெருமான் என்னும் ஒரு தெய்வம் வேதத்தில் வருகின்றதா? என்று வினவ, "புன்னைமாநகர வாசியார் உருத்திரனுக்கு அடைமொழியாக வரும் சிவன் என்னும் மொழியைக் காட்டுகின்றார்" என்று புரட்டுகிறார். புரட்டுவது மாத்திரமன்றி, இன்னும் சிவன் என்ற சொல் வேதத்தில் வருவதாக ஐயர் காட்டினால் நூறு ரூபா அன்று இருநூறு மூன்னூறு ஐந்நூறு ரூபாவும் கொடுப்பேன் என்று சாலமும பேசுகிறார். இங்ஙனம் புரட்டிச் சாலம்பேசுவது வேதத்திலே சிவன் என்ற ஒரு தெய்வம் இல்லையெனக் கத்தோலிக்கர் யாவரும் அருண்டு பழங்குடியாராகுலவாகிய தம்மில் மருண்டு மிகவும் மேலான பண்டிதரென்று தெருண்டு மதிப்பார்களெனக் கருதிப்போலும்; அது வாயாது. "சிவன் என்பது உருத்திரனுக்கு அடைமொழியாய்வந்தாலென்! உருத்திரனென்பது சிவனுக்கு அடைமொழியாய் வந்தாலென்! அம்மொழிகள் சிவன் என்னுந் தெய்வத்தையே யுணர்த்தி வந்தனவாம். உருத்திரனென்பது பரியாயப்பெயராய் நின்று சிவனை உணர்த்துமெனப் பழங்குடியார்க்கு நாம் முன்னர்க்கடிதத்திலேயே உணர்த்தியிருக்கின்றோம்.

பழங்குடியார் இருக்குவேதம் ஐயருக்குத் தெரியாதென்றும், இருக்குவேதத்திலே சிவன் என்னும் ஒரு அடைமொழி வருகின்றது என்று கூறி யசுர்வேதப்பிரமாணங்களை ஒழித்தமையினாலே பழங்குடியார் இருக்குவேதத்தை மாத்திரம் வல்லாரோ பெற்றுவிட்டார் போலும். ஐயருக்கு இருக்கு முதலிய வேதம் தெரிந்தாலென்! பிறரிடம் பெற்றாலென்! வேதப்பிரமாணம் மாத்திரமே பழங்குடியார்க்கு வேண்டியது. வேதப்பிரமாணத்தை மறுக்கமுடியாது இருக்குவேதம் ஐயருக்குத் தெரியாதென்றும், சிவன் என்னும் ஒரு அடைமொழி மாத்திரம் வருகின்றது என்றும் கூறுவதனால் அவ்வேதப்பிரமாணங்கள் மறுக்கப்பட்டுவிடுமா? வேதத்திலே சொல்லப்பட்ட உருத்திரன் யார்? பிரமா, விஷ்ணு, உருத்திரன் என்னும் திரிமூர்த்திகளிலொருவராகிய உருத்திரனன்றோ? அவ்வுருத்திரனே சிவனுமாம். அது

"உருத்திர மூர்த்தியெனப்போ னுயர்பரம் பொருளா யுள்ளோ, நிருத்தம தியற்று கின்ற நித்தனு மவனே தன் பொற்றாள், கருத்திடை நினைந்தோர் தன்னுள் காயமுந் திருப்போர் தாமும், பரிப்பராவன்னை செல்லப் பார்த்திடு ஞலப்பின் றுமால்" என்றும், உருத்திரனென் னுநாமமொப்பிலாவற்கு" என்றும் வருஞ்செய்யுட்களா னறியப்படும்.

இனி உருத்திரனைப் பழங்குடியார் மாடாடுகளைக் கொல்லும் ஒரு புசல்த் தெய்வம் என்கிறார். புசல் என்ற சொல்லின் கருத்தென்னையோ! இம்மொழியை இவர் எங்கே சம்பாதித்தாரோ அறியேம். (புசல் பறைபோலும்.) உருத்திரன் என்னுஞ் சொல்லின் பொருள் இவர்க்குத் தெரிந்தால் இங்ஙனம் கூறார். ருத்=பாவம், திரன்= நீக்குபவன். எனவே பாவத்தை நீக்குபவன் என்பது பொருளன்றோ! நன்னயமாக அவர்க்குச் சுகத்தைச் செய்பவர் என்பது பொருந்துமன்றோ! ஆதலால், பழங்குடியார் புசல்த்தெய்வமாகிய உருத்திரனைச் சுகத்தைச் செய்பவன் அன்று மங்கலமாகக் கூறுதல் பொருந்தாது என்பது பொருந்தாதன்றோ!

மேலும் சைவர்களாலே வணங்கப்படுந் தெய்வம் உமாசமேதரான சிவன் என்றும் சிவம் வேறு என்றும் புன்னைமாநகரவாசிக்கு அதன் பொருள் விளங்கவில்லையென்றும் இவர் பிறரிடங் கேட்டறிக என்றும் தாமும் சித்தாந்தம் கூறுகின்றார். இவர் கூறியது உண்மைதானோ? சைவர்களுடைய எந்த நூலிலாகுதல் இப்படிச் சொல்லப்படவில்லையே. "பராபரமாய் நித்தமாய்ப் பரிபூரணமாய்-நிராமயமாய் நிட்களமாய் நீங்காப்-புராதனமாய்-சத்தியமாய்ச் சித்தாய்ச் சதானந்தமாய்த் தேசாய்ச்-சுத்த வெறுவெளியாய்ச் சூனியமாய்ப்-புத்தமாய்த் தற்பரமாய்ச் சிற்கனமாய்த் தத்துவாதீதமாய்ச்-சிற்பரமாய் ஞானச் செழுஞ்சுடராய்-அற்புதமா-யறிவுக்கறிவா யகண்டிதமா யெங்குஞ்-செறியும் பரமசிவமாய்ப்-பிரியாச-வேதச் சிவ கரத்தன் வீற்றிருக்குந் தெய்வம்" என்றும், "நிராமய நிமலமாகி நித்தியானந்தமாகிப் - பராபரப் பிரமமாகி" என்றுங் கூறியவாறே சிவம் என்பது முப்பத்தாறு தத்துவங்களையுங் கடந்து நிற்கும் நிர்க்குணவஸ்து வென்பதும், அது ஆன்மாக்களின்மீது கொண்ட கருணையினாலே நவந்தருபேதமாகி நடிக்குமென்றும், அவற்றுள் சதாசிவனாய் அநுக்கிரக கிருத்தியத்தையும் மகேசனாய்த் திரோதான கிருத்தியத்தையும் உருத்திரனாய்ச் சங்கார கிருத்தியத்தையும் விஷ்ணுவாய்த் திதிகிருத்தியத்தையும் பிரமனாய்ச் சிருட்டிகிருத்தியத்தையும் செய்யுமென்றும், இந்த மூர்த்திகளுக்குச் செய்யும் வணக்கம் அந்தச் சிவத்துக்கே யென்றும், அந்தச் சிவத்தை அடைவதே முத்தியென்றும் சிவஞானபோதம் சிவஞானசித்தி முதலிய சிவஞான நூல்களிலும் பிறநூல்களிலும் கூறப்பட்டிருக்கின்றனவேயன்றிப் பழங்குடியார் சொல்லும்விதமாக அந்த நூல்களில் யாதொன்றும் சொல்லப்படவில்லை. இதுவே உண்மையென்பதைப் பழங்குடியார் சைவசித்தாந்த நூல்களைக் கற்றவர்களிடம் நன்கு கேட்டறிவாராக. சைவசித்தாந்த நூலின் உண்மைப் பொருளைச் சிறிதும் கற்றறியாத பழங்குடியார் "நவந்தருபேத மேகநாதனே நடிக்கும்" என்பதை உணராது உமாசமேதரான சிவனை சைவர்களுடைய தெய்வமன்றிச் சிவமல்லவென்று புரட்டுவதும் அதிசயமல்ல. கடவுள் என்னும் பொருளில் வரும் பிரமத்தை மந்திரம் செபம் என்ற சொல்லுவதும் அதிசயமல்ல. ஐரோப்பிய பண்டிதர்களாலும் மெச்சப்படும் வேதசிரோபாக உபநிடதங்களை நேற்றைய நூல்களென இகழ்வதும் அதிசயமல்ல. நேற்றைய நூலாகிய விவிலிய நூலைக் கிரேதாயுகநூலென்பதும் அதிசயமல்ல இதற்கையிலே தத்துவார்த்தத்தோடு கூடிய சைவநூற்பொருள்களை விளங்காது இடையிலே கற்பிக்கப்பட்டது என்பதும் அதிசயமல்ல. விநாயகர் யானைவடிவாக வந்தாரென்பதை நோக்கிச் சைவர் மிருகவணக்கக்காரரென்பதும் அதிசயமல்ல. நிற்க;

பழங்குடியார் தர்க்கம் தொடங்கிக் குதர்க்கம் பேசிப் பரமொழிகளாகிய நிந்தைமொழிகளில் தொடங்கிக்கொண்டார் இவர் முன் இந்துசாதன பத்திராதிபர் தர்க்கம்பேசக் குதர்க்கம் பேசிச் "சொட்டை" மொழிகளையுங் கூறுகின்றாரென அவர்மீது குறைகூறியதை மறந்து இப்பொழுது தாம் தர்க்கம்பேச வியலாது வசைகள் தொடங்கியது நியாயமா? இவர் இப்படித் தொடங்கியது தாம் தோல்வித்தானத்தை அடைந்தமையினாலன்றோ. ஐயர் பண்டிதரல்லர், தாமே பண்டிதர் என்பது பழங்குடியார்க்குக் கருத்தாதல் "பண்டிதர் தம் வினவை நோக்கியெனஞ் சாதித்துவிட்டார் என்பதால் விளங்கக் கிடக்கின்றது. பழங்குடியார் பண்டிதர் என்பது அவர் கிராமியச்சொற்களாலும் விதண்டாவாதத்தினாலும் விளங்கக் கிடக்கின்றது. பழங்குடியார் இனிமேல் வாதம் பேசுவதில் வசைகளை நீக்குக. இன்றேல் யாம் வாதஞ்செய்வதை நிறுத்துவேமென அறிக. (வரும்.)

இங்ஙனம், புன்னைமாநகரவாசி.

விளம்பரம்

ஓடுகளும் சிமெந்தும்

BEST PORTLAND CEMENT
SPECIALLY MANUFACTURED FOR JOSEPH & CO CEYLON
TRADE MARK
COLOMBO
JAFFNA
TILE BRAND

பெருந்தொகையான ஓட்டு மார்க்குச் சிமெந்தும், பேர்பெற்ற மங்களூர் ஓடுகளும், இரட்டை யானை மார்க்கு ஓடுகளும் விலைக்கிருக்கின்றன. வந்து பாருங்கள்.

யோசேப் அன் கம்பெனி,
தேவரீர்க்குளத்துக்கு முற்பக்கம்,
யாழ்ப்பாணம்.

விஜய சீலம்.

மேற்கண்ட பெயரினையுடைய ஒரு சிறந்த நவீன கதை, "வீரசிங்கன் கதை" "உதிர பாசம்" முதலியவற்றின் ஆசிரியராகிய சி. வை. சின்னப்பாபிள்ளையவர்களால் சாதாரண வசனரூபமாக இயற்றப்பட்டு வெளிவந்திருக்கின்றது. இதன் பெருமை இதனை வாசிப்போர்க்கே நன்கு விளங்கும்.

வண்ணை ஸ்ரீ சண்முகநாத அச்சியந்திரசாலையிலும் வண் கிழக்கு சி. வை. சின்னப்பாபிள்ளையிடத்திலும் விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

விலை பிரதி க-க்கு ரூபா க.

இலங்கை, இந்தியா தபாற்செலவு சதம் க௫.
தொலைவாய்ப்பகுதிக்கு „ „ உ௫.

சாலாமிஸ்ரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலக நன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளுமிதனால் உண்டாகும் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக்கருதியே யிப்போது இந்தலேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்ரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, ருமாஸ்தகா, பீதாரு, சாலாமுஸ்லி, சப்பேமுத்ஸ்லி, பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளிவிதை, நாகப்பூ, வங்கபஸ்பம், அபரகபஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம், சாம்பிராணிப்பதங்கம், இன்னும் அநேக புஷ்டியான மூலி வகைகள் சேர்த்துச் செய்யயபட்டிருக்கிறது.

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு ஒருவருஷத்துள் உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால்காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாய்வு, சூலைவாய்வு, இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லியவியாதிகள் சுகமாவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள்; பால் விர்த்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை இருத்தல் ஒன்றுக்கு ரூபா உ௦ அரைருத்தலுக்கு ரூபா க௦ கால் ருத்தலுக்கு ரூபா ௫. தபாற்செலவு பிரத்தியேகம்.

விலாசம்:—

ச. ஆறுகப்பிள்ளை,
ஆயுர்வேத வைத்தியசாலை,
இல. 96 முதல் மருதானை,
கொழும்பு.

இதைக் கவனியுங்கள்.

உலகமெங்குங்கியாதிபெற்றுக்கையாண்டுவரும் மருந்துகளின் விபரம்.

1. கெர்ப்ப உற்பத்தி மூலிகை உப்பு.

இது கெர்ப்பஸ்தானத்தில் சதை வளர்தல், பாசி படர்தல், காலாகாலங்களில் மாதவிடாயாகாமற் சரீரம் பருத்தும் இளைத்தும் இருத்தல், பொறுக்க முடியாத வயிற்றுவலி முதலிய காரணங்களால் கெர்ப்ப உற்பத்தி இல்லாதிருப்போர்க்கு அந்நோய்களை மாற்றிக் கெர்ப்பந்தரிக்கச்செய்யுமென்பது திண்ணம்.

கக நாள் மருந்தின் கிரயம் ரூபா க.

2. தாதுவிர்த்திக்குப் பஞ்சாமிர்த லேகியம்.

இந்த அமிர்தம்போன்ற லேகியத்தைப் பாவித்ததன்பின்பே இதன் குணம் வெளியாகும்.

உஉ நாள் மருந்தின் கிரயம் ரூ உ, அணா அ,

3 பிரமேக வியாதிக்குச் சத்துச் செந்தூரம்.

எவ்வித பிரமேகமும் இம்மருந்தை யருந்தினால் சூரியனைக் கண்ட பனிபோல நீங்கிவிடும்.

கக நாள் மருந்தின் கிரயம் ரூபா உ.

4. எவ்வித வாய்வுகளுக்குஞ் சண்டமாருதக் குளிகை.

சரீரத்தின் எந்தஇடத்திலும நடிக்குத்தும்வாய்வுகளுக்கும் மற்றைஎவ்விதவாய்வுகளுக்கும் இம்மருந்தேகாண்டீபம், ஐந்துநிமிஷத்திற குணமாகும்.

கச மாத்திரை புட்டி ஒன்று ரூ க, அணா அ.

5. மேகசஞ்சீவிச் சூரணம்.

மேகநோயுண்டாகியபின் காணப்படும் அரையாப்பு முதலிய சர்வரோகங்களையும் இம்மருந்து நீக்கிவிடும். உஉ நாள் மருந்து ரூ உ.

6. புளிப்பு மாதுளம்பழ லேகியம்.

அன்னத்துவேஷம், பித்தக்கிறுகிறுப்பு, ஜீரணக்குறைவு, மலக்கட்டு இவைகளுக்குக் கைகண்ட ஔடதம்.

சக நாள் மருந்தின் கிரயம் ரூ க, அணா அ.

7. இளைப்புஇருமலுக்குச் சுவாசகாசச்சூரணம்

எவ்வித இளைப்பு இருமல்களையும் அகற்றும் உஉ நாள் மருந்து ரூ உ.

8. மூலிகை ரத்தினத் தைலம்.

அபூர்வ மூலிகைகளாற் தயாரித்த சுகந்த பரிமளமுள்ளது. குணத்திற் சிறந்தது. மணத்தில் மிகுந்தது. ஒருமுறை அரைக்கால் ரூபாயிடை தைலத்தைத் தலைக்கிட்டுக்கொண்டால் அன்று முழுவதும் ஜிலுஜிலுப்புடனிருப்பதுமன்றி ஒரு வாரம் வரை பரிமளம் மாறாது. 8 அவுன்ஸ் டின் 1-க்கு ரூ 1.

9. பரிமள பற்பொடி.

பல் கூச்சம், இரத்தம் வருதல், துர்நாற்றம் இவைகளை மாற்றிப் பல் கறுக்காமல் முத்துப்போலிருந்து நறுமணங்கமழச்செய்து பல்வலியையும் 2 நிமிஷத்தில் கேட்கும்.

டப்பி 1 க்கு ரூ 0-4-0 டஜன் 1 க்கு ரூ 2-12-0.

10. படர்மேக சங்காரி வெண்ணெய்.

மேகநோயால் திரேகத்தில்விழும் எவ்வித பத்துப் படைகளையும் ௩ வேளையிற் குணமாக்கும்.

டப்பி க-க்கு அணா ௪. டஜன் க-க்கு ரூ உ, அ. அ.

எவ்வித மருந்துகளும் உபயோகிக்கும் விபரம் மருந்துடன் வரும்.

தவறுதீர்கள்! இதுசமையம்!! தவறுதீர்கள்!!!

உங்களுங்கள் அதிஷ்டத்தைப் பரீக்ஷித்துப்பாருங்கள்.

(க) ஜாதகத்தை அனுப்புங்கள். இல்லாவிடில் ஜனனவருஷம் மாசம் தேதி நாழிகை என்னும் இவைகளை அனுப்புங்கள். இல்லாவிடில் இது பார்த்தவுடன் இதனடியிற் குறித்துள்ளவைகளில் எந்தப்பாகம் வேண்டுமோ அந்தப்பாகம் வரைந்தனுப்பினால் இன்னின்ன காலத்தில் இன்ன வயதுக்குள் இன்னவை கிட்டும் கிட்டாதெனவும் கடிதம கிடைத்த நேரத்தைக் கொண்டு இன்ன விதமுடிவுபெறுமென்று சண்முகநாதன் திருவருளால் வரைந்தனுப்புவோம்.

(உ) க. ஆயுட்பாகம், உ. எந்தவிதத்தினால் தனங்கிடைக்கும், ௩. கல்யாணம் சொந்தமா, ௪. களத்திரபாகம் எத்தனை, ௫. அது முன்னு பின்னு, ௬. புத்திரனுண்டா, ௭. தனம் வைத்துப் போவேனு, ௮. மரணமாகுமிடம் சுயதேசமா, ௯. சொந்தவீடு நிலம் கிட்டுமா, க௦. கடன் எப்போது நிவிர்த்தியாகும, கக. விவகாரம ஜெயமாகுமா, கஉ. வினைத்தகாரியம முடியுமா.

தனி ஒருபாகம் சார்ஜ் ரூ க.
முழுத்தொகையும் அனுப்பவேண்டும்.
கஉ பாகம் சார்ஜ் ரூ ௫.

பாதிச்சார்ஜ் முற்பணமாக அனுப்புவோர்க்கு வி. பி. போஸ்றில் அனுப்புவோம்.

விபரந்தெரியவிரும்புவோர்விலாசம எழுதினால் ஜோதிஷ, வைத்திய "கியாட்லாக்" இனுமாக அனுப்புவோம.

வீ. பீ. சார்ஜ் பிரத்தியேகம்.

K. V. கோவிந்தசாமிநாயுடு,
ஜோதிஷம், வைத்தியம்,
மேலைச் சித்திரவீதி,
மதுரை.

☞ இவைகளுக்கு எழுதுவோர் இப்பத்திரிகையைக் குறிப்பிட்டுக் காட்டவும்.

பனுர்ஸ் பட்டுச்சேலை.

1. சிகப்பு, ரோஸ், பச்சை, புளு, ஊதா, வெளுர்ரோஸ், வெளுர்பச்சை, லைட்புளு, பின்கலர் இன்னும் பலமாதிரி நிறங்களில் உடல் பூராவும் பட்டில் பலவித பூ கொடி வேலைகள் செய்த சரிகை பனுர்ஸ் கரை பனுர்ஸ் முந்தி 16 முளம் சேலை ரூ 23 முதல் 25 வரை.

2. மேற்படிகரையில் கரைக்குச் சரிகை மாம்பிஞ்சு போட்ட 16 முளம் சேலை ரூ 30 முதல் 35 வரை.

3. மேற்படி சரிகை பனுர்ஸ்கரை உடல் பூராவும் சரிகைமத்தாப்பு பெரிய கொட்டடி 16முளம் சேலை ரூ 35 முதல் 40 வரை.

4. மேற்படி உடலில் கரைக்குச் சரிகை மாம்பிஞ்சு போட்டது 16 முளம் சேலை ரூ 40 முதல் 45 வரை.

5. மேற்படி சரிகை பனுர்ஸ்கரை உடல் பூராவும் சரிகைமத்தாப்பு சன்னக் கொட்டடி 16 முளம் சேலை ரூ 45 முதல் 50 வரை.

6. மேற்படி உடலில் கரைக்குச் சரிகை மாம்பிஞ்சு போட்டது 16 முளம் சேலை ரூ 50 முதல் 55 வரை.

7. மேற்படிசரிகை பனாஸ்கரையில் உடல் பூராவும் சரிகை நக்ஷத்திர புட்டா போட்ட 16 முளம் சேலை ரூ 45 முதல் 50 வரை.

8. மேற்படி நிறம் சரிகை மத்தாப்புக்கரையில் மத்தாப்பு முந்திபோட்ட 16 முளம் சேலை ரூ 30 முதல் 35 வரை.

9. மேற்படி நிறம் சரிகை மத்தாப்புக்கரையில் சரிகை மாம்பிஞ்சுபோட்ட 16 முளம் சேலை ரூ 35 முதல் 40 வரை.

10. மேற்படி மத்தாப்பு சரிகை கரையில் உடல் பூராவும் சன்னமாக மத்தாப்பு சரிகை கொட்டடி 16 முளம் சேலை ரூ 55 முதல் 60 வரை.

11. மேற்படி கரையில் சரிகை மாம்பிஞ்சுபோட்ட 16 முளம் சேலை ரூ 60 முதல் 65 வரை.

12. மேற்படி சாதா பனுர்ஸ்கரையில் உடல் பூராவும் நெருக்கு ஊசி வாணம் மத்தாப்பு சரிகை கொட்டடி 16 முளம் சேலை ரூ 75 முதல் 80 வரை.

சகாயவிலை! சகாயவிலை!!

கல்யாண பட்டுச் ஜவுளிகள்.

இந்தியர்களால் தயார் செய்யப்பட்டது.

நம்பிக்கையும் நாணயமும் நயமுமுள்ள தினுசுகள்.

குறிப்பு.

மதுரையிலிருக்கும், மு. க. ராமய்யர் அன்சன்ஸ் ஜவுளி கம்பனியென்றால் உலகம் பூராவும் நன்றாய் அறிவார்கள். அனுபவம் பெற்றுத் தேர்ந்த நெசவுகாரர்களால் தயார்செய்து வருகின்ற விசேஷமான ஜவுளித் தினுசுகள்.

பாவிப்புக்கும் சலவைக்கும் பரிசுத்தமாகவும், துலாம்பரமாகவும் விளங்கும்படியான மிகவும் உயர்ந்த சரிகை, சாய்ம், பட்டு நூல்களில் தயார் செய்யப்படுகின்றது.

ஒருமுறை எங்கள் கம்பேனி ஜவுளிகளைப் பாவித்தவர்கள் எப்போதும் எங்கள் ஜவுளிகளை உபயோகிக்க மனமுள்ளவர்களாயிருப்பார்கள்.

கல்யாணச்சடங்கு முதலிய விசேஷகாலத்தில் உபயோகிக்கும்படியான மேன்மைபெற்ற பட்டுச் ஜவுளிகளும் சாதாரணமாக எப்போதும் பாவிக்கக்கூடிய பலமாதிரி நூதன ஜவுளிகளும் ஏராளமாய்த் தயர்செய்யப்படுகின்றது. கொழும்பு, கண்டி, காலி, மட்டக்களப்பு, திரிகோணமலை, யாழ்ப்பாணம் ரெங்கூன், பினங்கு, சிங்கப்பூர், கோலாப்பூர்முதலிய அநேக இடங்களிலிருக்கும் வியாபாரிகளுக்கும், கம்மிஷன் ஏசண்டுகளுக்கும சொந்தப்பாவிப்புக்காரர்களுக்கும உத்தியோகஸ்தர்களுக்கும் பிரபுக்களுக்கும் தோட்டதுக் கங்காணி கணக்கப்பிள்ளை கண்டக்டர் முதலிய யாவர்களுக்கும் எங்கள் கம்பேனி ஜவுளிகள் ஏராளமாய் அனுப்புகிறோம்.

இதுவரையிலும் எங்கள் கம்பேனியில் ஜவுளிகள் வாங்கி வருகின்றவர்களும் இனிமேல வாங்குகிறவர்களும் அவரவர்கள் வளவிலும் அவரவர்கள் சொந்தக்காரர்கள் வளவிலும் சிநேகிதர்கள வளவிலும் இப்போது நடக்கப்போகிற கல்யாணச் சடங்குகளுக்கும் முக்கியமாய்த் தேவையான கூறைப்புடவைகளும், நவுநகைகளும், சால்வைவேட்டிகளும், இன்னும் பலமாதிரித் தினுசுகளுக்கும் முன்னுடியே எங்கள் கம்பேனிக்கு ஆர்டர்கொடுத்து விருப்பமுள்ள தினுசுகள் பெற்றுக்கொண்டு பெரும் லாபமும் நயமும் அடையவேண்டியது.

சில கூறைப் புடவைகளின் விலைகளும் தினுசுகளின் விபரமும் இதில் தெரிவித்திருக்கிறது. மற்றத் தினுசுகளின் விபரங்கள தெரிந்துகொள்ளவேண்டியவர்கள் கடிதமூலமாக விலாசந் தெரிவித்தால் கேட்லாக் இனுமாக அனுப்பக்கூடும.

வியாபாரிகளுக்கு மொத்தமாகவும் சில்லறையாகவும் சகாயவிலைக்குத் தேவையுள்ள தினுசுகள் அனுப்பக்கூடும்.

இலங்கை, பர்மா, சிங்கப்பூர, பினங்கு முதலிய இடங்களுக்குச் ஜவுளிகள் தபால் வி பி. பார்சலாக அனுப்பக்கூடும்.

F. M. S. சைசேர்ந்த கோலாலம்பூர் முதலிய இடங்களுக்குச் ஜவுளிகள் பாங்குமூலமாய் அனுப்பக்கூடும்.

முக்கிய கவனிப்பு.

தேவையான நிறங்களும், விலையும், நம்பருங்கண்டு விபரமாய் எழுதவேண்டியது.

(தொடர்ச்சி.)

13. மேற்படி கரையில் சரிகை மாம்பிஞ்சுபோட்டு மேற்படி உடல் சரிகைகொட்டடி 16 முளம் சேலை ரூ 80 முதல் 85 வரை.

14. மேற்படி கரையில் ரெட்டக்கரையாகவும் கரைக்குக் கொடிபேட்டுகள் வைத்த உடல்சரிகைகொட்டடி 16முளம் சேலை ரூ 85 முதல் 90 வரை

15. மேற்படிமாதிரிக் கரையில் உடல் பூராவும் சரிகை ரெட்டக்கொட்டடி நெருக்கு ஊசி வாணக்கொட்டடி 16 முளம் சேலை ரூ 100 முதல் 120 வரை.

16 மேற்படி கரையில் உடல் பூராவும் சரிகைஜோட்டபனிவாணத்தார் கொட்டடி16 முளம்சேலை ரூ120முதல் 150 வ.

17. மேற்படி ஒற்ற பனுர்ஸ் கரையில் உடல் சரிகை கொட்டடியில்சரிகை புட்டா சேலை ரூ 75 முதல் 80 வரை.

18. மேற்படிமாதிரிஉடலில் கரைக்கு ரெட்டக் கரையாகவும் கொடிபேட்டுகள் வைத்த சேலை ரூ 100 முதல் 120 வரை.

19. காஸ்மீர் பட்டில் உடல் சாதா கரைக்கும் முந்திக்கும் சரிகைவேலை செய்த ரோஸ், சிகப்பு, பச்சை, ஊதா நிறமுள்ள சேலை ரூ 20 முதல் 25 வரை.

20. மேற்படி உடல் சரிகை புட்டா சேலை ரூ 27 முதல் 35 வரை.

(கொர் நாட்டுப் புடவை.)

2 . மேற்படிநிறங்களில் உடல் சாதா முந்தி சரிகைவேலை மானம் சேலை ரூ 17 முதல் 20 வரை.

22. மேற்படி சரிகை ருத்திராக்ஷக் கரைச் சேலை ரூ 20 முதல் 25 வரை.

23. மேற்படி சாதாக்கரையில் உடல் சரிகைகொட்டடிசேலை ரூ25 முதல்30வ.

24. மேற்படி சரிகை ருத்திராக்ஷக் கரையில் உடல்சரிகை கொட்டடி சேலை ரூ 35 முதல் 40 வரை.

25. உடல் மஞ்சள் நிறம் ஜோட்டு பப்ளி, வைடூரிய பப்ளி, கூறை முகி சேலை ரூ 15 முதல் 25 வரை.

26. மேற்படி சுத்தப்பட்டு நயம் கொட்டடிசாயச்சேலை ரூ 25முதல் 30வரை.

27. மேற்படி கரைக்கும் முந்திக்கும் சரிகைபோட்டசேலை ரூ 30மு. 35வரை.

மு. க. ராமய்யர் அன்சன்ஸ், மேலக்கோபுரவாசல்,
போஸ்ட் நம்பர் 48 மதுரை, தென் இந்தியா.

M. K. Ramier and Sons. West Tower St.
Post No. 48 Madura, South India.

வான்முகில்வழாதுபெய்கமலிவளஞ்சுரக்கமன்னன், கோன்முறையரசுசெய்ககுறைவிலா துயிர்கள்வாழ்க, நான்மறையறங்களோங்கநற்றவம்வேள்விமல்க, மேன்மைகொள்சைவநீதிவிளங்குகவுலகமெல்லாம்.

☞ Printed and published by S. KandiahPillai, for the Proprietors at the Saiva Prakasa Press, Jaffna.